**Total No. of Pages: 2** **8309**

Register Number:

Name of the Candidate:

# PRE-FOUNDATION PROGRAMME EXAMINATION May, 2015

## (PART – I)

## 510: TAMIL
## (Common with Pre-Foundation Programme in Music)

Time: Three hours Maximum: 80 marks

---

**எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையெழுதுக.** **(5 × 16 = 80)**

1. பின்வரும் பாடலுக்கு பாநயம் பாராட்டி விளக்கி வரைக:

செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்
　　தேக்கிய கறியின் வகையும்
தன்னிகர் தானியம் முதிரை - கட்டித்
　　தயிரொடு மிளகின் சாறும்
நம் மதுரம் செய் கிழங்கு - காணில்
　　நாவில் இனித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா - உயிரை
　　உணர்வை வளர்ப்பது தமிழே　　　　- பாரதி தாசன்

2. கீழ்வரும் பகுதியை படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக:

மகாத்மா காந்தியடிகள் திறந்த காரில் உட்கார்ந்திருந்தார்கள். அவ்வண்டி மெதுவாக வந்தது. முன்னமே அடிகள் வரவை எதிர்நோக்கி நின்ற அனைவரும் களித்தார்கள். என் மகள் ஆறு வயதுக் குழந்தை கண்டதும் என்னை நோக்கி அப்பா! காந்தித் தாத்தாவைப் பார். என்ன அழகாய் இருக்கிறார் என்று உரக்கக் கத்தினாள். அருகில் நின்றோர் எல்லோரும் என் குழந்தையையே பார்த்தார்கள். அவர்கள் பார்த்த பார்வை இச்சிறு குழந்தை என்ன அழகைக் கண்டு விட்டது? என்று கேட்பது போல இருந்தது. காந்தியடிகளுக்கு அப்போது வயது எழுபத்தேழு. பழுத்த முதிர்ந்த கிழவர். துலையில் உரோமம் ஒன்று கூட இல்லை. வாயிற் பற்களும் ஒன்றுகூட இல்லை. அங்ஙனம் இருக்க அழகாய் இருக்கிறார் என்று குழந்தை கூறியதற்குப் பொருள் யாது? என்று ஆய்ந்தேன். புறத்தோற்றத்தைக் கண்டு அவ்வாறு கூறிடமாட்டார்கள். உள்ளத்தில் உள்ள ஒளியே காந்தியின் முகத்தில் பிரகாசித்திருக்க வேண்டும். அதை வைத்தே அழகானவர் என்று கூறியிருக்க வேண்டும். கள்ளம் கபடமற்ற சிறுமி உள்ளம் மாசுபடியாத இடம், அதனால் அவளுக்குப் புலனானது போல் நமக்குப் புலனாகவில்லை என்று ஆய்ந்தோம். அவள் கூறிய பின்னரே காந்தியடிகளின் அழகை உணர்ந்தோம்.

**8309**

3. நும் பல்கலைக் கழகத்திற்கு வருகை புரியும் ஆளுநரை வரவேற்று வரவேற்புரை எழுதுக.

4. தேச ஒற்றுமையை வலியுறுத்தும் விழிப்புணர்வு பற்றிக் கட்டுரை வரைக.

5. நீவிர் சென்றுவந்த பறவைகள் சரணாலயம் குறித்து ஒரு வருணனைக் கட்டுரை எழுதுக.

6. எழுத்துக்களின் முறை, பிறப்புக்கள் சிலவற்றை விளக்குக.

7. ஆகுபெயர் இலக்கணத்தை விளக்குக.

8. வினா விடை வகைகளை விவரிக்க.

9. அகத்தினை வகைகளை விளக்குக.

10. சொற்பொருள் பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

%%%%%%%